உ

பரமபதிதுணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு அவர்கள், கானமோகன டி. ஏ. இராஜா
மணியம்மாள், டி. என். சுந்தரராவ், ஜெகன்மோ[illegible]
துப்புசாமி முதலியார் முதலிய நாடகக்கம்[illegible]
யார் பலராலும் நடத்திவரு[illegible]

பார்ஸி நூதன[illegible]

அல்லியராணி

சரித்திரம் இரண்டாம் பாகம்.

இவை
திருநெல்வேலி மகா-ா-ா-ஸ்ரீ
வித்வான் நாராயணக் கவிராஜரவர்கள்
மாணுக்கரிலொருவரான மகா-ா-ா ஸ்ரீ
கோட்டாறு வீ. உடையார் பிள்ளை
அவர்களாலியற்றப்பெற்று,

மதுரை, புஸ்தக வியாபாரம்,

இ. ராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

[illegible]] 1924. [அணா 2.

223172

காமன் பண்டிகை எரிந்தகட்சி

மன்மதன் லாவணி.

திவாதசாந்த ஸ்தலவாசகர்,

ஸ்ரீமான் பழனிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் வர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டுகளில் பாடியுள்ளது. படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதி தேவியாரிடம் விடைபெற்றுச் செல்லுங்கால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். மன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் புராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! **12**-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தம்.

மூர்த்துங்கள்! புத்தகத்திற்கு மூர்த்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதைவஸ்திராபரஹரணம், கீசக சம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்வதி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ 1-4-0

விகடநகைப்பை விளைவிக்கும்

விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்களே! இதுவரை விகடப்புத்தகங்கள் அனேகம் பார்த்திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இராதென்பது திண்ணம். விலை அணா 4.

ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங்கியுள்ளது. கதைகள் படிக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும். விலை அணா 6

கோமாளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

உ

பரமபதி துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு, டி. என். சாமிநாத முதலியார், இந்துஸ்தான் கே. எம். தர்மலிங்கம்பிள்ளை, ஜெகன் மோஹன பார்ஸி குப்புசாமி முதலியார், மன மோஹன அரங்கசாமி நாயுடு, கான மோகன டி. ஏ. இராஜாமணியம் மாள், பி. பாலாமணி கம்பெனி யார் முதலியோர் நடாத்தி வருகிற பார்ஸி நூதன

அல்லியரசாணி சரித்திரம்

இரண்டாம் பாகம்

விநாயகர் துதி வெண்பா.

சீரார் வடிவழகி சேயிழையாள் அல்லிகதை
பேரார் சரிதமாய்ப் பேசவே—நாராருந்
திங்கள் நதிமலியுஞ் செஞ்சடையன் தந்தருள்மா
தங்கமுகன் தாளே சரண்.

[அருச்சுனன் எந்தவிதத்திலாவது அல்லியை விவாகம்செய்து விடவேண்டுமென்று கிருஷ்ணமூர்த்தியைப் பிரார்த்திக்கிறான்.]

இராகம்-செஞ்சுருட்டு-தாளம்-ஆதி.

பல்லவி.

அல்லியைக்கல்யாணம்—செய்ய
அனுக்ரஹம் செய்வாய்—மனப்படியேநான் (அ)

அநுபல்லவி.

சொல்லிவைத்ததெல்லாம் விட்டு
சும்மா சும்மா என்ன மெட்டு
வல்லமாயக்கிருஷ்ணா குட்டு
மார்க்கமேநம் பேர்க்கிருக்கட்டும் (அ)

அர்—கோபால கிருஷ்ண பரமாத்மாவே! எனதாசைக்கனியாகிய அல்லியரசாணியை என்றுசேர்வேன். அவளிடம் தெரிவிப்பதாகச்சென்ற தாதிப் பெண்களேயும் இன்னும் காணேமே! மனவாதையானது அதிகரிக்கின்றதே! என்செய்வேன்!

[இவ்வாறு குளக்கரையில் மருந்து உரைத்துக்கொண்டே அருச்சுனன் புலம்பிக்கொண் டிருக்கின்றான்.]

11-வது சீன்.

அல்லிதர்பார் மண்டபம்.

அல்—தாதிகாள்! கூச்சலிட் டோடிவந் திருக்கின்றீர்களே! என்ன சமாச்சாரம்? ஏன் இப்படி ஓடிவந்தீர்கள்?

தோழிகள் விருத்தம்.

வல்லமை மிகுத்துமிந்த மதுரைமா நகரையாளும்
செல்வியே அல்லியம்மா செப்புவோம் புதுமையொன்று
மெல்லிநின் குளத்தில்யாரோமேன்மையில்மருந்துரைத்து
அல்லியே உனைமணந்து அவனியில் வாழ்வேனென்றான்.

இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

நாங்கள் பொன்குடமெடுத்து நீரை நாடியே
நாயகி போனேமெல்லோரு மொன்றுகூடியே
நாரியல்லியென்று நவின்றுகொண்டொருவன்
நன்குமணர மருந்துரைக்கிற னென் அம்மணீ

பாண்டிய குமாரியான பாவையல்லியே
பாதகனொருவ னுங்கள் பேரைச்சொல்லியே
பாரியேவாவெனக் கூறியே மகா ஆ
பாசவார்த்தை பேசுரான் கூசாமலம்மணீ

[இதைக்கேட்ட அல்லி ஆச்சரியத்துடன் ஆங்காரக் கோபங்கொண்டு துள்ளிஎழுந்து]

இராகம்-இந்துஸ்தான் கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்பேரைச்சொல்லி • மருந்துரைக்கின்றுனு
என்ன ஆணுவமடி என்ன ஆணுவமடி
அவன்—தன்பேரில்லாமலே இந்தவேளை தனில்
கொன்றிடவேணுமடி கொன்றிடவேணுமடி
கொஞ்சமும் நெஞ்சகம் அஞ்சிடாமலே

குளத்துக்கரையிருந்து
குளத்துக்கரையிருந்து
குளத்துக்கரையிருந்து (என்)

அடி! என் பெயரைச்சொல்லி, மருந்துரைக்கக் கூடிய அந்தத் துஷ்டனை உடனே கட்டிக்கொண்டுபோய் ஆற்றுச் சுடுமணலில் உருட்டிக் கொல்லுங்கள். உடனே செல்லுங்கள்.

தோ—உத்திரவுபோல் செய்கின்றோம் அம்மணி.

12-வது சீன்.

ஆற்றங்கரை.

தோழிகள் அருச்சுனனைக்கட்டி ஆற்றுக்குக் கொண்டுபோகிறார்கள்.

தோ—அருச்சுனனைச் சுடுமணலில்நிறுத்தி ஐயா! இவ்விடத்திலிரும். அல்லி வருவாள் சுகமடைவீர்.

கிருஷ்ணன் மாய்கையால் வெய்யில் அர்ச்சுனனுக்குக் குளிர்ச்சியாகவும் தென்றல்காற்றும் வீசுகின்றது. தாதிகளுக்கு மட்டும் வெய்யில் நெருப்பாய்க் கொதிக்கின்றது.

தோ—என்னடி! நம்முடைய கால்கள் எல்லாம் கொப்பளிக்கின்றது? இவன் உல்லாசமாயிருக்கின்றானே? என்ன ஆச்சரியம்!

நிக்க நிக்கச் சோக்குதேந்தன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மெல்லிடையாளல்லி இங்குவருவாளோ
வேளைதவறுமல்வந் துகந்துமொழிவாளோ (மெ)

அநுபல்லவி.

சொல்லடிவிரைவாய்த் தோழிகளேபதில்
சுந்தரியாளென்னை மணாந்துகதிபெற (மெ)

ஆசையினாலேநான் ஆற்றில்வந்துநிற்க
அன்புடனேவெகு சந்தோஷமாயுரைத்த (மெ)

இந்தஇடத்திற்கு எப்போவருவாளோ
எந்திசைழயல்லியால் எங்குதுசிந்தை (மெ)

அரு—அம்மா! உங்கள் அரசியாகிய அல்லி எப்போது வருவாள்? அவளை நினைந்து நினைந்து, என் மனது வருந்துகின்றதே!

தா—என்ன! ராணியை எப்போது வருவாளென்று கேட்கின்றான்! உடனே வாருங்கள். போய் ராணியிடம் தெரிவிப்போம்.

13-வது சீன்.

கொலுமண்டபம் அல்லி தர்பார்.

அல்—தாதிகாள்! என்ன சமாச்சாரம்?

தோ—அம்மணி! அவனைக்கட்டி ஆற்றுமணலி லுருட்டினோம். எங்கள் கால்கள் எல்லாம் கொப்பளித்து, நாங்கள் மட்டும் துன்புற்றோம். அவனுக்கு யாதொன்றையும் காணோம். அவன் சல்லாபமாகவும், உல்லாசமாகவும் தங்களை எங்கே என்றே கேட்டுக்கொண்டிருக்கிறான்.

அல்—சேனாதிபதியான செங்கமலம்! என்ன விந்தையாயிருக்கின்றது? நீங்கள் சொல்லுவது நிசந்தானா?

தாரதிலாரதிலபகுகே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சேனையைக்காக்குந் தாதியரே
செங்கமலமே இங்கு வந்திடுவாய் (சே)

திடமுடனவனுட இடமேபடையுடன்
செல்லுவீரே அவனைக் கொல்லுவீரே
சீக்கிரம்பதில்வந்து சொல்லுவீரே (சே)

நியாயவிரோதம் நினைத்ததினாலே
ராஜ்ஜியத்துமேற் காதமப்பாலே
நாசப்படுத்துவீர் நாட்டுத்தூக்காலே (சே)

இதமுடனவனுட ஜடமதுமடிந்திடச்
செய்குவீரே செய்குவீரே-அச்
செய்தியைவந்து உரைசெய்குவீரே (சே)

தாதிகாள்! சீக்கிரம் செல்லுங்கள்.

தோ—அவ்வாறே செல்லுகின்றோம் அம்மணி!

14-வது சீன்.

மதுரைமா நகரின் மேற்குத்திசை ஆரண்யம்.

தூக்குமரம்.

அல்லி ஆக்கினையால் தாதிகள் அருச்சுனனைத் தூக்குமரத்திலேற்றவருதலும், அருச்சுனன் தூக்குமரத்திலேறத்தெரியாதென்று பாசாங்குசெய்தலும், செங்கமலம் ஏறிக்காண்பித்தலும் கிருஷ்ணபகவான் தந்திரத்தால் செங்கமலம் மடிதலும்.

அர்—பெண்மணிகாள்! என் கண்மணியாகிய அல்லிமணி! எங்கே? இன்னும்காணேமே? ஏன் இவ்வளவு தாமதம்?

தோ—ஐயா! பொறும். இந்த மரத்தின்மீது ஏறி நில்லும். அல்லி உடனே வந்துவிடுவாள்.

அர்—அம்மா! எப்படி ஏறுவது? எனக்குத்தெரியாதே. எவ்விதம் ஏறவேண்டுமோ அவ்விதம் செய்து காண்பித்தால் அதன்பின் நானேறுகிறேன். எப்படியும் அல்லி கிடைத்தால் சரி.

தோ-'என்ன ஐயா! ஆண்பிள்ளையாய் இருக்கின்றீர்! கேவலம்பெண் பிள்ளையாகிய நாங்களா காண்பிக்கவேண்டும்? இதோ பாரும் என்பதாகச் செங்கமலம் என்னும் தாதியானவள் ஏணிமே லேறிப் பலகையில் நின்று தூக்குமரத்தின் கயிறு கழுத்தில் மாட்டி "இவ்விதம்தான்" என்று காண்பிக்கின்றாள். கிருஷ்ண பகவான் பெருச்சாளி ரூபங்கொண்டு ஏணியைத் தட்டி விடு கின்றார். உடனே கயிறு இறுகி இறந்து விடுகிறாள். மற்ற தோழிகள் எல்லோரும் அலறிக்கூச்சலிட்டு, அல்லி இடம் தெரிவிக்க ஓடுகின்றனர். இவையாவுமுணர்ந்த அர்ச்சுனன்.

பாலம்கே நாக்ரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஜாலஞ்செய்யாதடி ஜாலஞ்செய்யாதடி
தாதியிறங்கி வருவாயடி
ஜாலஞ்செய்யாதேயிக் காலம்வீண்போகுதே
தார்குழல் அல்லியை நாடியே
சீராகவேநீங்கள் கூடியே
சேரவரச்செய்வீர் ஓடியே
சென்று அழைத்துவா- செங்கமலமென்னும் சேடியே (ஜா)

கண்டுகொண்டேனடி கண்டுகொண்டேனடி
கண்ணை விழித்து மிரட்டாதடி
காண்டீபனல்லவோ ஏண்டி மயக்குறாய்
காரிருள் தன்னைநான் வெல்லவே
கண்மணியல்லிக்குச் சொல்லவே
காலமாகுமுன்னே செல்லவே
கண்டவர்கலங்கக் கொண்டாடுவதழ கல்லவே (ஜா)

காலையுதறியே காலையுதறியே
கண்டவர்கள்மனம் பதறியே
காயம்நடுங்கவு பாயம்செய்கின்றாயே
கன்னியல்லி மாதுசொற்படி
கட்டளை இட்டாளோ இப்படி
காரிகையேபதிற் செப்படி
காசினிதன்னில் காணேனுனக்குநான் ஒப்படி (ஜா)

15-வது சீன்.

அல்லி வீற்றிருக்கும் கொலுமண்டபம்.

அல்லி—தாதிகாள்! என்ன வாட்டமாகிய முகத்தோடு வருகின்றீர்கள்? அப்பாதகனால் என்ன நேரிட்டது?

தோழிகள்-தரு.

தாயையும்விட்டுத் தனித்திருந்தால் என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்

உத்தமியேமகா ராணியே செய்தி உரைத்திடுவோமம்மணி
மத்தம்பிடித்த மடையனலேயவ மானமானதம்மணி

அங்குநடந்த அனர்த்தத்தை நாங்க ளறைவோம் கேளாயம்மா
செங்கமலமந்தத் தூக்கினுலேசிவ லோகம்போய்ச் சேர்ந்தாளம்மா

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சேனுபதியான செங்கமலமங்கு செத்துமடிந்திடவே
செய்திட்டபாவியைப் பத்திரகாளியாங்தேவிக்குப்பலியிடவே
தேவிக்குப்பலியிடவே தேவிக்குப்பலியிடவே

சேடியே போடிமுன் ஞடியேநீ
தேங்காய்பழம்கூடத்துடனே
தேங்காய்பழம்கூடத்துடனே
தேங்காய்பழம்கூடத்துடனே

தாதிகாள்! அக்கொடிய துஷ்டனைக் காளிகாதேவி சந்நிதிக்கு உடனே கொண்டுபோய்ச் சிரசைத்துணித்துப் பலியிட்டு வாருங்கள். சீக்கிரம்; இனிவந்து ஒன்றுஞ் சொல்லக்கூடாது.

தாதிகள்—அவ்வாறே செய்து வருகின்றோமம்மணி!

16-வது சீன்.

காளிகாதேவி கோவில்.

[பத்திரகாளிதேவி முன்னிலையில் தோழிகள் நின்று.]

ஹே! காளிஜெகதீஸ்வரி! ஜெகத்காரணி! ஜெகன்மாதா! தாயேமஹாமாயி! எல்லைப்பிடாரி! இந்த நரபலியை எங்களரசி அல்லி ஆக்ஞைப்படி கொடுக்கின்றோம். ஏற்றுக்கொள்ளவேண்டும்.

[என்பதாக அருச்சுனனை நிறுத்தி, வாளை ஓங்குகின்றனர்.]

பத்—பெண்களே! உங்கள் அரசியாகிய அல்லிக்கு ஆண்வாடை ஆகாததால், எனக்கும் அவ்வாறே ஆண்பலியாகாது. ஆதலால் உடனே கொண்டு செல்லுங்கள்.

[என்பதாகக் கிருஷ்ணனின் ஆக்ஞையின்பேரில் தெரிவித்துவிடுகிறுள். தாதிகள் அல்லியிடம் செல்லுகின்றனர்.]

7-வது சீன்.

அல்லி வீற்றிருக்கும் கொலுமண்டபம்.

தாதி—அம்மணி! தங்களுக்கு ஆண்வாடை ஆகாததுபோல் காளி காதேவிக்கும் ஆண்பலியாகாதெனச் சொல்லி விட்டனள்.

அல்லி—அடி என்ன வேடிக்கையாய் இருக்கிறது?

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

மந்திரந் தந்திரங் கற்றவனோ அவன்
மாயக்காரன் தானோ இல்லை
இந்திரப் பிரஸ்த மென்றுசொல்லிமுன்
எழுந்தோடிப் போனவனோ

வண்டனைக் கொண்டுபோய்த் தின்றுவிடும்படி.
மாபூதக்கிடங்கிற் போடு
மாபூதக்கிடங்கிற் போடு
மாபூதக்கிடங்கிற் போடு (மந்)

அல்லி—தாதிகாள்! அவனைப் பூதக்கிடங்கில் கொண்டுபோய்த் தள்ளிப் பூதங்களுக்கு இரையாகும்படி செய்யுங்கள்.

தோ—அவ்வாறே செய்கிறோம் அம்மணி!

18-வது சீன்.

பூதக்கிடங்கு.

பூதமகாராஜன் சபை.

[பூதமகாராஜன் தர்பாரில், அல்லியனுப்பிய அருச்சுனனைக்கிருஷ்ணபகவான் ஆக்ஞைப்படி பூதங்கள் எல்லாம் உல்லாசமாகத் தூக்கிக் கொண்டு, ஆடலும் பாடலும் செய்கிறது.]

டான்ஸ் வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எங்கள்மீதிலேகிருபை யேபுரிகுவையே
திங்கள்வதனு பொங்குமதனு சிங்காரமாயிங்ஙனம்நீ (எ)
காதலாகிக் தாகமானேம்
கானசிங்காரா காருண்யதீரா நேமஹைய்யாரா நீமகிழ்வாக (எ)

[அருச்சுனன் கோலாகலத்தைப் பார்த்துத்தாதிகள் அல்லியிடம் போய்த் தெரிவிக்கின்றனர்]

19-வது சீன்

அல்லி வீற்றிருக்கும் கொலுமண்டபம்.

கிருஷ்ணன் மெல்லிவேடம்பூண்டு அருச்சுனனைத் தேடிவருதல்.

அம்மா மதுரை மீனுக்ஷி என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆசைநாயகனைத் தேடி இந்த
அவனியிலலைந் தோடி வந்தேனென்
அங்கம்நொந்து வாடி
அம்மணி இங்கு நாடி
அம்மணி இங்கு நாடி

துவாரகாபுரியென் னூரு நாங்கள்
தோகைமார்களிரு பேரு இப்போது
துன்பமானேன் வேறு
துணையில்லைகண் பாரு
துணையில்லைகண் பாரு

[நாயகனைத் தேடிவரும் மெல்லி என்பவளைத் தாதிகள் அல்லியிடம் அழைத்துக் கொண்டுபோய்த் தெரிவிக்கின்றனர். அல்லி விசாரிக்கின்றனள்.]

அல்லி—பெண்ணே! நீயார்? இவ்வாறு தனிமையாகப் புலம்பவர வேண்டிய காரணமென்ன?

மெல்லி—அம்மா! என்சொல்லுவேன் என்கெதியை!

இராகம்-பார்வி-இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அல்லி—உன்பேரென்னடி
மெல்லி—என்பேர் மெல்லியென்பார்
அல்லி—ஆனாலெங்கு வந்தாய்
மெல்லி—இங்குதானே வந்தேனே
அல்லி—எதுக்குநீவந்தாய்
மெல்லி—என்னாதனைத்தேடி
அல்லி—அவனது செயலென்ன
மெல்லி—அந்த விபரஞ் சொல்வேன்
அல்லி—ஆனால் சொல்லுவாய்.

மெல்லி தரு.

நடந்ததென்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனதுபேர்மெல்லி என்பார் எந்தன்
தங்கைபேர் அல்லி என்பார் (என)

அநுபல்லவி.

மனமுடனென்னை மணமதுமுடித்து
மன்னனென் தங்கைமேல் மருள்கொண்டுதுடித்து
எனதுசொல்லினையும் கேளாதுதடுத்து
எங்கேயோசென்று றென்னைக்கைவிடுத்து (என)

அம்மா! நானோ துவாரகாபுரிநகர். என் தந்தைக்கு இரண்டு குமாரத்திகள். அதில்என்பெயர்மெல்லி. என்தங்கைபெயர் அல்லி. அவள் என்னினும் அதிரூபசவுந்தரிய முடையவள். என்னை மணமுடித்த மணவாளர் அவள்மீது ஆவல்கொண்டவராகி, ஓர்விதமாய் இருந்தார். நாங்கள் எவ்வளவோ சொல்லியும் கேளாது ஏதோ மருந்து தயாரித்துத் தண்ணீர்கண்ட இடமெல்லாம் அல்லி அல்லி என்று, அவள் பெயரைச்சொல்லி உரைத்துக்கொண்டு, திரிவதாகக் கேள்வியுற்றோம். அனேக இடங்களில்தேடியும் அகப்படவில்லை. இங்கிருப்பதாகக் கேள்வியுற்று வந்தேனம்மா மகாராணி!

அல்லி தரு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்பேரைச் சொன்னுனென்று
உன்னுதன் தன்னையின்று
இடஞ்சல் விளைக்கும்பூதக்
கிடங்கிற் போடவேசொன்னேன்

அவனை அழைத்துக்கொண்டு போ
அவனை அழைத்துக்கொண்டு போ
அவனை அழைத்துக்கொண்டு போ (என்)

பெண்ணே! என்பெயருடைய ஒருபெண் இப்பூவுலகத்திலிருப்பதாக நான்இதுவரை கேள்வியுற்றதேஇல்லை. என்னைத்தான்நினைத்துத் திரிகிறுனென்பதாக எண்ணி, அனேக இம்சைகள் செய்து, பின்னால் பூதக்கிடங்கிலடைக்கும்படி செய்திருக்கிறேன். நீ அங்கு சென்று, அவனை அழைத்துக்கொண்டு போகலாம்.

அல்—மந்திரி பவளசேனு! என்ன கவனித்தாயா? உடனே அவனைப் பூதக்கிடங்கினின்று நீக்கிவிடு. போ சீக்கிரம்.

[அருச்சுனன் பூதக்கிடங்கினின்றும் நீங்கி, அல்லியை நினைத்து நினைத்து உருகி கிருஷ்ணன் சயனித்திருக்கும் இடத்திற்கு வருகிறுன்.]

20-வது சீன்.

[கிருஷ்ணன் நித்திரையோடிருக்கிறுர்.]

அரு—கோபாலா! இன்னும் நித்திரை நீங்கவில்லையா?

[எழுப்புகின்றுன். கிருஷ்ணன் எழுந்திருக்கிறுர்.]

கோ—அருச்சுனு! பலவிதமான கனவுகள் அல்லவோ கண்டேன்.

அரு—கனவாவது நினைவாவது! என்ன கனவு கண்டீர்கள்?

கிருஷ்ணன் கனவுகண்டதை உரைக்கின்றார்.

பீதாம்பரஜபங்கஜ பிராணகதார் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கண்டேனென் கனவது காண்டீபனே அதைக்
கழறுவேன் கேட்பாய் கவனமுடனே (கண்)

எண்டிசையும்புகழ் எழில்விஜயாநான்
என்னசொல்லுவேனதன்பலனெதுவோதான் (கண்)

வனவழிசெல்லுமோர் குறத்திவந்து வெகு
வாருடன்மூன்று குளிகைதந்து (வன)

வனிதையல்லிக்குளத்தி னுரையெனஉரைக்கவும்
வஞ்சியர்கள்கண் டல்லிக்கீதுரைக்கவும் (கண்)

அல்லிமுனிந்தவ ளாக்கினையின்படி
ஆர்ந்தமணலி லுருட்டியபின் (அல்)

சில்லிடகின்னகம் திகைத்துமேவாட
சீக்கிரத்திலுனைத் தூக்குமரத்திலிட (கண்)

வல்லியுமிவ்வுரை வழங்கிடவே தாதி
மாதுசெங்கமலம் மடிந்திடவே (வல்)

செல்லியாம்பத்திரகாளிக்குப்பலியாகச்
செய்யுங்களென்றது முடியாமற்போக (கண்)

வாலையருள்பெற்ற தந்திரனே மந்தர
வாதியோவிந்த்ரம கேந்திரனே (வாலை)

ஜாலங்கள் கற்றவனென அவள்சடைக்கவும்
தாதியாற்பூதக் கிடங்கினி லடைக்கவும் (கண்)

அரு-கோபாலா! சித்திரையில் பித்தம் அதிகரித்திருக்கலாம். மேலும் உமதுதேகம் பித்ததேகமல்லவோ! அதனால் கண்டிருப்பீர்.

கிரு—அருச்சுனா! இவ்வாருகவுமிருக்குமோ? சரிதான் நீ நல்ல புத்திசாலி. உன்னுடைய ஆபரணங்களெல்லா மெங்கே?

அரு—கோபாலா! என்ன சொல்வேன். நீர்கண்டதுபோலவே அனுபவித்தேன். நீர் நித்திரை செய்யும்போது அல்லியின் ஆசையால் அல்லித்தடாகத்தில் பார்த்து வரலாமென்று சென்றேன். இடையில் ஒரு குறப்பெண் குறிசொல்லுவதாக வந்து, நமக்கு இதுவரை ஏற்பட்டவைகளெல்லாம் தெரிவித்தனள். அன்றியும் 'வசிய குளிகை' என்றும் சில மாத்திரைகளைக் கொடுத்து அல்லித்தடாகத்திலுரைத்தால் அல்லி வசமாவாள் என்பதாக ஏமாற்றி, என்னுடைய ஆபரணங்களை எல்லாம் பறித்துக்கொண்டாள். அவள் சொல்லிய வண்ணம் செய்து அவஸ்தையே அடைந்தேனல்லாது யாதொரு பயனும் பெறாது மோசம் போனேன் கோபாலா?

கோ-மோசம் போனையா? எனக்குத் தெரியாமல் காரியம் முடிக்க நினைத்தனைபோலும்? அந்தக் குறத்தியிருக்குமிடம் தெரியுமா?

அரு—தெரியும். அவள் சொல்லிய வண்ணம் பலிதமாகாவிடில் ஆபரணங்களைக் கொடுத்துவிடவேண்டுமென்று கேட்டேன்.

கோ—அப்படியா! எங்கே! உடனே சென்று வாங்கிவா?

[அருச்சுனன் குறத்தியிடம் சென்று ஆடையாபரணங்களை வாங்கிக்கொண்டு வருகிறான்.]

அரு—கோபாலா? இதோ வாங்கிவந்துவிட்டேன்.

விருத்தம்.

கண்ணனேயடியார்தம்மைக் காத்திடுங்கேசவாவென்
எண்ணம் நீ ரறிகிலீரோ ஏந்திழை அல்லிமாதைத்
திண்ணமா யெந்தனுக்குத் திருமணஞ் செய்வீராகில்
எண்ணலா மகிழ்வாயென்று மிணையடி போற்றுவேனே.

கிரு—அருச்சுனா! நீ பாம்புரூபம் எடுத்துக்கொள்? நான் பாம்புப் பிடாரனாகி அல்லியிடம் உன்னைச் சேர்க்கிறேன். உனக்கு வேண்டிய காரியங்களெல்லாம் முடித்துக்கொண்டு வந்துவிடு.

21-வது சீன்.

மதுரைமாநகர், ராஜவீதி.

கிருஷ்ணன் பிடாரனுகி, அர்ச்சுனனைப் பாம்பாக்கி ஆட்டிக்கொண்டிருத்தல்.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

ஆடுபாம்பே தெளிந்தாடுபாம்பே அரன்
அடியினைக்கண்டோமென் றுடுபாம்பே

தெளிந்து தெளிந்து தெளிந்தாடுபாம்பே சிவன்
சீர்பாதங்கண்டோமென் றுடுபாம்பே

அல்லிக்குப் பாற்குடம் கொண்டுபோகும் தோழியர்கள் பாதையில் ஆட்டிக்கொண்டிருக்கும் பாம்பாட்டியின் நேர்த்தியைக் கண்டு, பாற்குடங்களைப் பாம்புக்குவைக்கக் கிருஷ்ணன் மாய்கை யால் குடங்களிலுள்ள பால்களையெல்லாம் பாம்பு குடித்துவிடவும், தோழிகள் அலறிக்கொண்டு அல்லியிடம்போய்முறையிடுகிறார்கள்.

22-வது ஸீன்.

அல்லி வீற்றிருக்கும் கொலுமண்டபம்.

[தோழிகள் பாற்குடம் போன விதத்தைக்கூறி முறையிட அல்லி அப்பாம்பைப் பார்க்க வேணுமென்று ஆசையுறுகிறாள்]

விருத்தம்.

பாற்குடம்போயிற்றென்று பாவைகாள்பதறவேண்டாம்
நேர்த்தியா யாடும்பாம்பு நிகரற்ற தானதாலே
பூர்த்தியாய்ப் பார்க்கவேண்டும் புகழ்ச்சிசேர்பிடாரன் தன்னை
யார்க்குமே தெரிந்திடாம லன்புட னழைத்துவாரீர்

[அல்லி ஆக்ஞைப்பிரகாரம் தோழிகளால் அழைத்து வந்த பிடாரன் ஆட்டியபாம்பின் வனப்பைக்கண்ட அல்லி, பாம்பின் மீது ஆசையுற்றவளாய்ப் பிடாரனிடத்தில் பாம்பு தனக்கு வேண்டுமென்று அதைவிலைக்குக் கேட்கின்றாள்.]

இராகம்-நாதநாமகிரிகை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னவிலைவேண்டு மிதற்கு-பாம்புப்பிடாரா
என்னவிலைவேண்டு மிதற்கு (என்)

அநு பல்லவி.

அன்னதனை இன்னதென நன்னயமு டனுரைப்பாய் (என்)

பல்லவி.

பி— அன்னையே விலைநான்வேண்டிடேன்-இதைவிற்றிடேன்
அன்னையே விலைநான்வேண்டிடேன். (அன்)

அநுபல்லவி.

என்னுடன்பிறந்ததங்கை இவளைப்பிரிந்துயிராள் (அன்)

சரணம்.

அ— தக்கவிலையைக் கண்டாலுன் தங்கைதள்ளமாட்டாளடா
மிக்கவேமகிழ்வாய்விலை இக்கணம்பெற்றுநீசெல்வாய் (என்)

சரணம்.

பி— எந்தன்தங்கை இன்பமாக எங்குமிதுபோய்விடாமல்
சந்ததமிதோடுகூடிச் சல்லாபத்துடனிருப்பாள் (அன்)

அ— இன்றொரு தினத்திற்காவது இங்கிருக்கட்டும்
இன்றொரு தினத்திற்காவது
சென்றுவாபாம்புப்பிடாரா சேமத்துடனுந்தன்வீடு
இன்றுராசென்றதும்வந்தெடுத்துப்போகின்பாம்பைநீயும் (இ)

பி— தங்கையைக்காணுவிடிலிது தானேஇளைக்கும்
தங்கையைக்காணுவிடிலிது
மங்கையர்களைக்கண்டாலென் தங்கையைப்போலவே நோக்கும்
இங்கிதம்பெருகும்பல சங்கீதத்தில் தேர்ந்திருக்கும் (தங்)

அல்லி-தரு-வேறுமெட்டு தன்யாசி.

இளைத்துப்போனலதனின் இடைக்குரத்தினங்களை
நிறுத்துத்தருவேனுனக்கு
களைத்துப்போகாமலுந்தன் கருத்தின்படியதற்குக்
கற்கண்டுபாகுகலந்த மிக்கருசியானபழ
வர்க்கமிட்டாய்களுமீவேன் (இளை)

இடா—அம்மணி! இப்பாம்பை என் தங்கை உத்தரவின்றி யான் யாருக்கும் கொடுப்பதேயில்லை. தாங்கள் எங்களைப்பரிபாலிக்கும் அரசியாய் இருப்பதால் தங்கள் உத்திரவை மீறக்கூடாதவனுகவே இருக்கிறேன். நாளைவருவேன்; இடை குறையாதிருக்கவேண்டும். குறைந்த இடைக்கு ரத்தினங்கள் கொடுக்கவேண்டும். சென்று வருகிறேன். [செல்கின்றுன்]

23-வது சீன்.

அல்லியின் சயனக்ரஹம்.

அல்லி சர்ப்பத்தோடு விளையாடிக்கொண்டிருந்து சயனித்திருக்கின்றுள். அருச்சுனன் சுயரூபமெடுத்து அல்லியோடு சேருகின்றுன்.

அரு—ஆஹா! இவள் ரூபலாவண்யத்தை என் சொல்வேன்? விழித்துக்கொண்டாளானுல் என்னவாகுமோதெரியவில்லையே. மிகவும் கோபக்காரியாயிற்றே! ஆயினும் பார்ப்போம்.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

தையலைப்பார்க்க என்மெய்சிலிர்க்குதே
எய்யும்வேளினுல் அடா
எய்யும்வேளினுல் என்மனம்தளருதே(தை)

பூமிமெச்சிடு என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாதரசியுந்த னாசையினல் மனம் வாடினேன்
குளம் சாடினேன் எங்கும் தேடினேன்-இன்று
மாயன் சகாயத்தா லாயிழையே உன்னைக்கூடினேன்
உறவாடினேன்

வாணிகேள்வனிரு பாணிகளுமிக நோகவே
துயர்போகவே அழ காகவே-செய்து
மாமதுரைதன்னில் வந்திருக்கச்செய்தான் ஏகவே
எனக்காகவே

சொந்தமாக இங்கு வந்துநேர்ந்த அருஞ் சொர்னமே
பஞ்சவர்ணமே இத் தருணமே-எந்தன்
சோகம்போக்கமன தாகஎழில்மிகும் அன்னமே
தடையே னின்னமே

நாரதன்சொன்ன காரணப்படி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

நாரியே நல்லு தாரியே எந்தன்
நாயகி சொந்த அல்லி தயர்
நாசஞ்செய்திடும்மெல்லி உந்தன்
நாமம்நானன்றுசொல்லி உன்னை
நாடச்செய்தற வாகச்செய்ததும் நாரணன் மகன்வில்லி

ஆரடாவெனத் தீரமாகவே
ஆரண்யந்தனி லன்று அடுத்
தாண்பிள்ளைவந்தா னென்று சின
மாகவேநீயும்நின்று இந்தண்
டாக்குவேனுயிர்போக்குவேனென மான்மையைநானுங்கண்டு

பாரியாக்கிடத் தேரியேயகம்
பாவையேசெழுந் தேனே உந்தன்
பாசத்தாலிங்கு நானே நாகப்
பாம்புவேடங்கொண் டேனே பஞ்ச
பாணன் வாளி வருத்துதே நீகண் பாரடிமடமானே

அருச்சுனன் அல்லியைச்சேர்ந்தபின் முன்போல் பாம்பு உருவம் எடுத்துப் படுத்துக்கொள்கிருன். பொழுது விடிந்தது. தோழிகள் வந்து எழுப்புகின்றனர்.

அல்லிக்கும், தோழிகட்கும் தர்க்கம்.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பொழுதுவிடிந்ததுதாயே அம்மா பொழுதுவிடிந்ததுதாயே
பூவையேதூக்கம் நீங்கிடுவாயே (பொ)
முழுவதுமறிந்த மொய்குழலாளே
முழுமதி மறைந்து மார்த்தாண்டனுதயமாகிப் (பொ)

அல்—கழுதைபோலேண்டி கத்துகிறீர் நீங்கள்-கழுதை
காலையிலுங்களுக்கு வேலையில்லையோபோவீர் (கழு)
அழுகிற நரியைப்போலே அனைவருங்கூடி
அண்டையில்வந்துங்கள் தொண்டையைத்தீட்டி (கழு)

தோ—கலையினம்போலிருந்த முகமே அம்மா-கலை
காரணமென்ன மாறியிருக்கச்சந்த்ர (கலை)
தலையும்விரிந்துஉங்கள் நிலைமையுமிகக்குலைந்த
தன்மையறியாததென் உண்மையையுரைசெய்வீர் (கலை)

அல்—பாங்கிகாள் நேற்றை பக்காலே அந்தப்
பாம்புப்பிடாரனுரைத்தது போலே
தூங்கினபின்னந்தத் தரகம்வந்து புள்
காங்கிதமாகக் காயமதுசெய்தது (பா)

அல்—தோழிகாள்! இந்த பாம்பினுடைய விபரீதத்தை என்னவென்று சொல்வேன். இதனோடு மிக்க ஆனந்தமாக வெகுநேரம்வரை விளையாடிக்கொண்டிருந்தேன். நித்திரைபுரிதற்கு நெடுநேரமாய்விட்டது. அயர்வினால் எல்லாம் என்னை யறியாமலே நிலைகுலைந் திருக்கின்றதேயன்றி, வேறல்ல.

பாம்—அம்மணி! நேற்று இப்பாம்பை என் தங்கையிடம் கொண்டு போகாததால் நிரம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டாள். உடனே நிறுத்துக்கொடுத்தனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[பிடாரன் பாம்பை நிறுத்து, குறைந்த இடைக்குச் சமபாகமாக ரத்தினக் கற்களைப் பெற்றுச் செல்லுகின்றான்.]

20-வது சீன்.

மதுரைமாநகரில் ஓர் வீதி.

கிரு—அருச்சுனா! இரவில் எவ்வாறு நடந்தது? இனியாவது ஊருக்குப் புறப்படலாமல்லவா?

அரு—கோபாலா! உம்முடைய மாய்கையை நான் என்னவென்று சொல்வேன். உம்முடைய கிருபையினால் அல்லியோடு நல்ல சுகத்தை அடைந்தேன். அவளை விவாஹம் செய்யாமல் எவ்விதம் வருவது? என் மனது எவ்வாறு நிலைபெறும்?

ரகுமாரேதும் ரகுவாஹ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

பல்லவி.

இனி-மேலாவது அவளை மாலைசூட்டிடும் (இனி)

அநுபல்லவி.

சீலர்க்குதவும்திரு மாலேதயவுசெய்கோ
பாலா அல்லிமாது பாரியாகி நான் சுகிக்க (இனி)

மாலைமுடித்தால்மற வாமலன்புடன்காலை
மாலையும் பணிவேனே வாமனனேநானே (இனி)

கிரு—அருச்சுனா! உனக்காக இன்னும் ஓர் வேலை செய்கிறேன். மறுபடியும் மிருகங்களை ஏவி, ப்யிர்களை அழிக்கும்படி செய்கின்றேன். அல்லி வேட்டைக்கு வருவாள். தாகவிடாயை உண்டாக்குகிறேன். தவித்துவரும் வழியில் நான் ஒரு பிராமணப்பெண்போலவும், நீ ஒரு கிழப்பிராமணனாகவும் வேடம் பூண்டு, தண்ணீர் கொடுப்போம். நம்மை அவர்களுடன் அரமனைக்கு அழைத்துப்போவாள். சரியான சமயம் பார்த்து, விவாகம் செய்து விடுவோம். இதுதான் தக்க யோசனை.

அர்—கோபாலா! எவ்விதத்திலாவது எனக்கு விவாஹம் முடிந்தால் சரி வேறொன்றும் எனக்குத்தெரியாது.

25-வது சீன்.

குடிகள் இம்சையை நீக்கும்பொருட்டு மறுபடியும் அல்லி வேட்டையாடுகிறாள்.

மோகம் போல்லாது என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேட்டையாடுவோம் வாரீர் தோழிமாரே (வே)

அநுபல்லவி.

வேட்டையாடுவோம் பெரும் கூட்டமுடனேவரும்
காட்டுமிருகங்களைவாட்டிக்குடிகள்துயரோட்டிவரலாம்வன (வே)

சரணம்.

நாகக்கணைமைநாம னேகமெடுத்துப்பிர
யோகஞ்செய்துமிருகஞ்சாகச்செய்வோ மதிவேகமுடனேவாரும்()

அல்லி—மந்திரி பவளசேனா! வேட்டையாடிக் களைப்பு மிகுதியால் தாகவிடாய் அதிகரித்திருக்கின்றது. வெகுதூரம் வந்துவிட்டோம். சமீபத்தில் தடாகமொன்றையும் காணோமே!

தசதீரமாரே என்ற வர்ணமெட்டு.

இராகம் கமாசு- தாளம்- ஏகம்.

கண்ணிகள்.

தாகத்தினு லெனதுபிராணன் தத்தளிக்குதே
ஏகமாகப்படர்ந்ததானில் எங்குஞ்சுற்றியே (தா)

தங்குமிவ்வனத்தில் தண்ணீ ரெங்குங்காணேமே
எங்குங்காணேமே நாமெங்குதேடுவோம் (தா)

அல்லி—சகிகாள்! சமீபத்தில் யாரோ தண்ணீர்ப்பந்தர் வைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகின்றதே விசாரியுங்கள்.

[தோழிகள் தண்ணீர் வாங்கிவந்து கொடுக்கத் தாகந்தீர்ந்தபின் அல்லி அவர்களை யாரென விசாரிக்கிருள்]

அல்லி—சோகமுற்றுவந்த என்தாகத்தைத்தவிர்த்த அம்மணி! உங்களுக்கு மிக்க நன்றி பாராட்டக் கடமை பூண்டிருக்கிறேன். நீங்கள் யார்? எந்நகர்? அதிக விருத்தாப்பியத்துடனிருக்கும் இவர் யார்? உங்கள் பெயர்யாது? எக்காரணம்பற்றித் தனிவழி எய்தினீர்கள்? சவிஸ்தாரமாகத் தெரிவிக்கவேண்டும்.

கிருஷ்—அம்மா நாங்களிருப்பது இந்திரபுரம். என் பெயர் கிருஷ்ணவேணி. இவர் என் நாயகர். இவர் பெயர் பார்த்தலிங்கேஸ்வரய்யர். எங்களுக்குப்புத்திரப்பேறின்மையால் நாங்கள் செய் தகருமம் தீரும்பொருட்டுக் காசியாத்திரைசெய்து வருகின்ரேம். எங்கள் குலகுருவின் ஆக்ஞைப்பின் பிரகாரம் தங்கும் இடங்களில் தண்ணீர்த்தருமம் செய்துவருகிரேம். இனி எங்கள் நகருக்குச் செல்கின்ரேம். வேறு விசேடமில்லையம்மா!

அல்லி—அம்மணி! தாங்கள் நாயகரோடு எமதரமனைக்கு வந்து, கொஞ்சகாலமிருந்து, அப்பால் தங்கள் நகரம் செல்லலாம்.

கிருஷ்:—ஆ ஹா ஹா நிரம்ப சந்தோஷம். நாங்கள் அரசர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறவர்கள். தங்கள் கட்டளை மீறுவோமா? உத்திரவுபோல் வருகின்ரேமம்மா!

[அல்லியோடு அரமனைசென்று, வசித்து வருகின்ருர்கள்.]

26-வது சீன்

அல்லிராணியின் அரமனை.

[பிராமணப்பெண்வேடம் பூண்டுள்ள கிருஷ்ணன் ஒரு தினம் அல்லியிடம் "அம்மணி! இன்று எங்களுக்கு இலக்குமிவிரதம். அவ்விரதத்தைக் கொண்டாடுவதற்குக் கலியாண கிரியைகளுக்குரிய சாமான்கள் முழுமையும் வேண்டும்" என்று கேட்க, அவ்வாறே அளிக்கக் கிருஷ்ணன், அருச்சுனன், அல்லி, மந்திரி முதலிய சகலரையும் சம்பிரமமாக இருக்கச்செய்து, விவாஹமுகூர்த்தத்திற்குரிய காரியாதிகளை எல்லாம் நடத்தி, மாங்கல்யம் தரிக்கவேண்டிய சமயத்தில் கிருஷ்ணன் மாய்கையால் எல்லோருக்கும் நித்திரையை உண்டாக்கி, அல்லிக்கு மாங்கல்யத்தைத் தரிக்கும்படி செய்கிறார்.]

கிரு—அருச்சுனா! இதுதான் தகுந்தசமயம். உன் தந்தையிடமிருந்து மாங்கல்யத்தை வரவழைத்திருக்கிறேன். உடனேகட்டிவிடு.

அர்—கோபாலா! நல்ல யுக்தி செய்தீர்! உம்முடைய உபகாரத்திற்கு யான் யாது கைம்மாறீகுவேன்? ஆனால் இன்னுமொரு யோசனை! கோபாலகிருஷ்ணா! உத்திரவுப்பிரகாரம் நடத்திவிட்டேன். விழித்துப்பார்த்தும் அறுத் தெறிந்துவிட்டு, அவள் பாட்டுக்கு இருந்துவிட்டால் என்ன செய்யலாம்?

கிரு—அருச்சுனா! அவள் எவ்வித ஆயுதத்தினால் வெட்டினாலும் அறுபடாதிருக்கச் சாபமளித்திருக்கிறேன். இனி நம் நகருக்குச் செல்லலாம் வா; புறப்படு சீக்கிரம்.

[அல்லியின் விருதுக்கொடிகள் முதலியவற்றை அறுத் தெறிந்துவிட்டு, இருவரும் இந்திரப்பிரஸ்தம் செல்கின்றனர்]

அல்லி விழித்துப் பார்த்துக் கழுத்தில் தாலியிருக்கக் கண்டு, அகங்காரங்கொள்ளுகிருள்.

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மட்டி இருட்டுவேளை கிட்டித் திருட்டுத்தாலி
கட்டிவிருதறுத்துச் சென்றுனே
பட்டிமுரட்டுப்பயல் கெட்டநடத்தைக்காகக்
கிட்டிக்கட்டின துஷ்டன்பாரவனைக்
கண்டாலிப்போதிரண்டு துண்டாக்குவேனே என்னைப்
பெண்டாக்கவேகினைத் தான்பாவி (ம)

அல்லி—அடி என்ன! அல்லியென்றுல் இவ்வீரேழு உலகங்களும் கிடுகிடென நடுங்கும். இப்போது இப்பேர்ப்பட்ட காரியம் செய்யத் துணிந்த பிராமணத்தியையும், பிராமணக்கிழவனை யும் காணுமே! அவர்களைக் கொண்டுவாருங்கள் சீக்கிரம்.

அல்லி வருத்தமுறல்.

சுந்தரப்யாரி மைஹோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இதுவென்னமாயம் எவர்செய்யுபாயம்
இதுவுமுனதருளோ சிவனேசொக்கநாதனே (இ)
எந்தன்கழுத்தினிலே யானைத்தலைபோல்தாலி
இறுக்கிக்கட்டிப்போனுனே யாரோ அறிகிலேனே (இ)

தோ—அம்மணி! இந்நகர் முழுதும் சுற்றிப்பார்த்தோம். பிராமணத்தியையும், கிழவனையும் ஓரிடத்திலும் காணும்.

{அல்லி இதுவரை நடந்தவைகள் எல்லாம் தன் தமயனுர்களாகிய பாண்டியர்களிடம் தெரிவிக்க, இது ஏதேனும் அரசர்கள் செய்த சூதாக இருக்கலாமென்று, ஒவ்வொரு தேச அரசர்களையும் வரவழைத்து, சமாச்சாரத்தைத்தெரிவித்து, நெய்க்கொப்பரையில் நெய்யைக் காயவைத்து அதில் கையை நனைத்துப் பக்கத்திலுள்ள

சம்பாநெல்லைக் கசக்கி யரிசியாக்கவேண்டுமென்று சொல்ல, ஒவ்வொருவரும் அவ்வாறேசெய்து சென்றார்கள். வீமசேனன் கொப்பரைக்குக் கையைக்கொண்டு போகுஞ்சமயம் அக்கினிவீசுவதைக் கண்டு, பயந்து செல்ல கிருஷ்ணன் அக்கினியைக் குளிரச்செய்ய வீமன் நெய்முழுவதும் குடித்துவிட்டு, நெல்முழுமையும் கசக்கி அரிசியாக்கி, வாயில் போட்டுக்கொண்டு, சென்று விடுவதைத் தெரிந்த அல்லி, கோபாவேஷத்துடன் படையெடுத்து, இந்திரபிரஸ்தம் சென்று தருமபுத்திரரோடு யுத்தம்புரிந்து ஒவ்வொருவரும் ஒட்டமெடுத்தபின் சகாதேவன் யுத்தம் செய்கின்றான்.

6-வது சீன்.

அஸ்தினாபுரம்.

சகாதேவனுக்கும், அல்லிக்கும் யுத்தம்.

சாரங்கந்தன்னிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சகா—அல்லியே நீ மெத்தத் துள்ளித்துடிப்பதுமேனோ-உன்
ஆண்மைத்தனத்தைநான் வீணடிக்காதுசெல்வேனோ
வில்லில்தொடுத்ததி வேகம்தாகவே
விடுமக்கினிசரமுக்கிர வலியெப்படிபதில்செப்படி (அல்)

அல்—சின்னப்பயலே யென் முன்னமெத்தனைபேர்வந்து-மிகச்
சீறிப்பொருந்திப்பின் னோடிவிட்டார் மனம்நொந்து
சின்னபின்னமாகச் செய்வேனென்று மன
தீரத்துடன்வீரந்தனைப் பாரென்றெனைக்கூறுஞ்சிறு(சின்)

சகா—அண்ணியெனஉன்னை எண்ணியிதுவரைநானே
அன்புடனேயொருதுன்பஞ்செய்யாமல்நின்றேனே.உனைக்
கண்ணியில்வீழ்ந்த பறவையைப்போலினிக்
கதறும்படியேயிக்கணம் கணையைப்பிரயோகிக்றேன் (அல்)

சகா—நாமிவளோடு எவ்வளவு போராடியும் முடியவில்லை. இவளைத் தந்திரமாய்ப் பக்கத்திலுள்ள புலிக் கூட்டினுள் சிக்கும்படி செய்வதுதான் வேலை. என்று சகாதேவன் ஓடுவதுபோல் புலிக்கூண்டிற்குள் ஓடுகிறுன். அல்லி அவனைத் துரத்திக் கொண்டு உள்ளே சென்றுள். சகோதேவன் தந்திரவழியாக வெளிவந்து, புலிக்கூண்டின் கதவைப் பூட்டிவிடுகின்றுன். அல்லி உள்ளிருந்து நிந்தனை செய்கின்றுள்.

அருச்சுனன் கூண்டிலிருக்கும் அல்லியோடு தர்க்கிக்கிறுன்.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அரு—அல்லியென்று சொல்லும் நல்லமெல்லியாளே
அட்டியின்னுமேனேடி தாலி கட்டினேனும் நானடி
ஆதலினுலெந்தன் மானே எனைக்கூட வாறுதானுமேனடி

அல்—கோபம் வந்திடும்
அரு—வந்தா லென்னடி
அல்—வந்தாற் கேடடா
அரு—கேடு யாருக்கு
அல்—ஊரார் கேலிசெய்யக்கள்ளத்தாலிகட்டினதை
கேடென் றறியாயோடா
அரு—அறிந்தேனடி
அல்—திறந்தே விடு
அரு—விட்டால் மகிழ்வையா
அல்—கெட்டுப் போகாயா
அரு—உந்த னிஷ்டங்கோராவிட்டால்
கெட்டுப்போவேனதுமட்டும் உண்மைதானடி
அல்—மடையா போடா
அரு—அடமேனேடி
அல்—விடுவாயடா
அரு—விடையீயடி
அல்—எந்த ஞசையால் திருட்டு வேஷம் போட்டுவந்த
மோசக்காரா ஓடடா

தருமர் அருச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றது முதல் ஏற்பட்டசங்கதி முழுமையுந்தெரிந்து, சகாதேவன் தந்திரத்தால் அல்லியைக் கூண்டிலடைத்துக்கொண்டு வந்ததற்கும் சந்தோஷித்து, துரோபதை, சுபத்திரை, நாககன்னி முதலியவர்களையனுப்பி அல்லிக்குச்சமாதானஞ்செய்து,சகலதேச அரசர்களையும் வரவழைத்து, அல்லிக்கும், அருச்சுனருக்கும் விவாஹம் செய்விக்கின்றார்.

அருச்சுனன் அல்லியை மாலைசூட்டடல்.

தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேசராஜவீரர்போற்றத் திருமணங்கொண்டேன்-ஒளிர்
திங்களைவென்று விளங்குமுக அல்லி தேவியையின்றே
இங்கிதமென்றனைவருஞ்செறிபந்தினர்மந்திரிகுழாங்கூட
மேன்மைதங்கிய வாத்தியமேளங்க ளெங்குமுழங்கிப்புகழ்நீட
பொங்கியசுந்தர அந்தர மங்கைகள் சுபமங்களம்பாட
கொங்கணரங்கர் கலிங்கரெனும்பல
கொற்றவர்கள் சூழ
பற்றலர்கள் தாழ
நற்றவர்கள் வாழ திகழ் (தே)

அருச்சுனனும்,அல்லியும் புத்திரபாக்கியமுதலியசகலபாக்யங்களும் குறைவின்றி சுகஜீவியாய் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

மங்களத் தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

திங்கள் கங்கைசென்னிசூடும் சங்கரர்க்கு மங்களம்
மங்கைதேவி மாதுமை மனோன்மணிக்கு மங்களம்
ஆதிசத்தி ஐங்கரன் ஆறு முகர்க்கு மங்களம்
சோதிரூபமாலயன் வாணிதனுக்கு மங்களம்
வானுறைசுரர்கள் கவி வாணர்கட்கு மங்களம்
தேனமர்மொழியாள் அல்லி தேவிக்கென்றும் மங்களம்
காண்டீபன் நகுல சகாதேவனுக்கு மங்களம்
ஆண்டகையான தரும ரண்ணனுக்கு மங்களம்

திண்புயத்தனான வீம சேனனுக்கு மங்களம்
வண்மையாக இச்சரிதை வாசிப்போர்க்கு மங்களம்
நற்குணம்புகழஇதனை நன்னயமா யச்சிட்ட
விற்பன கோபாலகிருஷ்ணக் கோன்தனக்கு மங்களம்
இன்னிலத்தில் பாவலர்க் கிரங்கிவேண தளித்திடும்
மன்னவன் ராமசாமிக்கோன் மகிபனுக்கு மங்களம்

வாழி விருத்தம்.

திங்களஞ் சடையிற்சூடும் சிவனடி யார்கள்வாழி
பைங்கொடி அல்லியோடு பற்குனன் தனக்கும்வாழி
எங்கினும் நிறைந்தஜோதி ஈசன்மா லயனும்வாழி
மங்களம் நிறைந்தஇந்த மாநிலம் வாழிவாழி.

பார்ஸி நூதன அல்லியரசாணி சரித்திரம்.

இரண்டாம்பாகம்

முற்றுப்பெற்றது

இப்புத்தகத்தையாவது, இதிலுள்ள பாடல்களை வேறு புத்தகங்களில் சேர்த்தாவது உத்தரவின்றி அச்சிடுவோர்க்கு

அறிக்கை வெண்பா.

ஒப்பாம் அரசாங்கத் தோர்சட்டத் தண்டனைக்குள்
தப்பாம லுற்றுத் தவிப்பராம்—இப்பாவைக்
கோபால கிருஷணக் கோனின்றி யாரேனும்
பூபாலச் சிட்டோர் புகுந்து.

உ

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்துவான்

ஸ்ரீமான் சங்கரதாஸ சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான

சந்தச்சரபப, ஷண்முகதாஸவர்களியற்றிய

பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷானபாடல்கள் இதுவே நீந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவோர்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவனேடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்துக்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு, சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல்கள். பாடலிற்சிறந்த நாடகத்தார்க்கும் பயன்தரும் பாடல்கள். இன்பம் பயக்கும் இந்துஸ்தான். கவாய், தில்லாணு,டப்பா, மெட்டுகளில் சிறந்த பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும் சந்தப்பாடல்கள் நிறைந்த பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதிதாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. படிக்கப்படிக்கத் திகட்டாத திரும்பத்திரும்பப் படிப்பதற்றிக் கீழே வைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக் காப்பிகளே தயாரிவிருக்கின்றன. விலை அணு 5.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாய் விட்டது! 12-ம் ஒரே புத்தகம் வெளியாய்விட்டது!

நண்பர்கள் வேதநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணசரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதை வஸ்திராபரணம், கீசகசம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்ஸி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம் முதலிய அற்புத சரித்திங்கள் 12-ம் ஒன்றுசேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ 1-4-0.

தியாகராஜ சோதிட ஆனந்தக் களிப்பு.

சோதிடங் கற்றுப்பலன் சொல்லப் புகுவோர்க்கு நிரம்ப அவசியமான புத்தகம். இப்புத்தகத்தை ஒரு முறை படிப்போர் சகல விதமான ஜாதகங்களுக்கும், 12 பாகங்களுக்கும் குறைவின்றிப் பலன் கூறலாம். விலை அணு 7.

மதுரைத் தமிழ்வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ

நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களியற்றிய.

பதிவிரதா பராக்ரமம் அல்லது

சாவித்ரி சத்யவான் சரித்திரம்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!

நமது தமிழ் வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய "நல்லதங்காள் சரித்திரத்திலுள்ள பாடல்களைப்படித்த கனவான்கள் அவர் பாடல்களையே படிப்பதற்குப் பிரியங்கொண்டு வாயூறாதவர்கள் இல்லை" என்பது யாவருமறிந்த விஷயமல்லவா?

ஷை நாயுடவர்களியற்றிய இந்தச் சாவித்ரி சத்யவான் சரித்திரத்தில் கலிங்க தேசத்தரசன் ராஜ தர்பாரில் தேசவிசாரணை செய்யும் ஆடம்பரமான பாடல்களும், சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றும் வீராவேசமான பாடல்களும், வசனங்களும் ராஜ தந்திர முறைப் படியும், மிக்க ஆக்ரமரோஷ விதிப்படியு மிருக்கும்.

சாவித்ரி தன் சகிமார்களுடன் நந்தவனத்திலுலாவும் காட்சியமைந்த பாடல்களும், சிம்மத்தால் துரத்தப்பட்ட சாவித்ரி சத்யவானால் ஆதரிக்கப்பட்ட சமயத்தும், இருவர்க்கும் ஏற்படும் காதல் கலப்பின் சமயத்தும் உள்ள பாடல்களும் தர்க்க வசனங்களும் வெகு சிருங்காரமா யிருக்கும்.

எமராஜன் தர்பாரில் எமபடர்களிடத்தில் அகப்பட்டுத் திண்டாட்டப் படும் சண்டாளன் ஒருவன் தான் செய்த தீயசெய்கைகளைச் சொல்லிப் புலம்புதல் படிக்கப்படிக்கக் கொண்டாட்டமா யிருக்கும். இப்பாடல்களைப் படித்தோர்களும், கேட்டோர்களும் எத்தகையினராயினும் அவர் தீயவழிகளில் மனதைச் செலுத்த மாட்டார்களென்பது திண்ணம்.

சத்யவான் உயிர் நீங்கும் சமயம் இருவர்க்கும் பிரிவாற்றாமையால் ஏற்படும் சோகரசமான பாடல்களைப் படித்தோர் கல்மனதுடையவராயினும் அங்கு கலங்காதிருக்க முடியாதென்பதில் ஐயமில்லை.

பதிவிரதா சிரோமணியாகிய சாவித்ரி தன் விரதமகிமையால் எமனுடன் பின்தொடருஞ்சமயம் இருவர்க்கும் ஏற்படும் தர்க்கமும், கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும், வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமும், இன்பமுமாயிருக்கும். இங்கு தம்பதிகளின் அன்பின்தகைமை வெளிப்படும்.

இச்சரித்திரத்திற்கென அமைந்த தமிழருமையான வசனசாதுர்யங்கள் வாசிக்கத்தகுந்தது, இன்னிசையமைந்த பாடல்கள் படிக்கத்தகுந்தது. இடத்திற்குத் தக்கவாறு அமைந்த புதிய வர்ணமெட்டுகள் கேட்கத் தகுந்தது. சொற்பக் காப்பிகளே தயார். 1-2பாகங்கள் விலை அணா—8

,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	,,	0—2—0
,, ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்	,,	0—1—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.